14 கிலோ மீட்டர் தூரம் ஆகிறது. ஆனால் இப்போது திருவண்ணாமலையிலிருந்து காஞ்சி வழியாக 40 கிலோ மீட்டரும், செங்கம்வழியாகச்சென்றால்காரப்பட்டுக்கு 45 கிலோ மீட்டர்ரும் ஆகிறது. எனவே அந்தப் பாலத்தை விரைவில் கட்டி முடித்தால் பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதால் அது சீக்கிரம் கட்டி முடிக்கப்படுமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தால் தான் அந்தப் பாலம் பழுதடைந்திருக்கிறது. அதற்கான ஆய்வுகளை செய்துதான் இன்றைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 505, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

505—

பாலம் கட்டுதல்

* 4421 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் நூறு பாலங்கள் கட்டும் திட்டத்தின் கீழ் நிலக்கோட்டை தொகுதியில் உள்ள பாலங்களையும் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) வத்தலக்குண்டு நகரத்தையும் ஆடுசாபட்டியையும் இணைக்கும் அளவில் மஞ்சளாறு கால்வாயில் பாலம் கட்டவும், வத்தலக்குண்டு ஒன்றியம் இளநீகரையிலிருந்து பிரிந்து செல்லும் ரோட்டில் குறுப்பப்பட்டி அருகில் பாலம் கட்டவும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம்—அதாவது ஆடுசாபட்டி வத்தலகுண்டு டவுன் பஞ்சாயத்தை சேர்ந்த ஊராகும். அந்த ஊர் தனியாக இருக்கிறது. அதற்கு இடையே மஞ்சளாறு வாய்க்கால் சென்று கொண்டிருக்கிறது. மழைக்காலங்

களில் மட்டுமல்ல. சாதாரணக் காலங்களில் கூட அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வரமுடிவதில்லை. ஜனங்களும் இங்கே. வந்து சாமான்கள் வாங்கிக் கொண்டு போகமுடியவில்லை. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் நன்றியோடு இருப்போம். ஏற்கனவே எனக்குப் பாலம் சாங்ஷன் செய்து கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் நன்றியோடு இருப்போம். ஆகையினால் இந்தப் பாலத்தையும் இந்த ஆண்டே எடுத்து இதற்கு சாங்ஷன் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்மைநாயக்கன் -டு- வத்தலக்குண்டு என்ற அந்த ரோட்டிலே இளநீகரை இருக்கிறது. அங்கேயிருந்து தென்புறமாகச் செல்லும் போது பெரிய ஓடை, பெரிய பள்ளம் இருக்கிறது. அதிலே தண்ணீர் வரும்போது யாருமே நடக்க முடியாது. ஆகையினால் இந்த இரண்டு பாலங்களுக்கும் மறுபரிசீலனை செய்து இதை இந்த ஆண்டிலேயே சாங்ஷன் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் ஒரு பேரூராட்சியின் சாலையில் இருக்கின்ற பாலம். இதை நெடுஞ்சாலைத் துறையின் கீழே கட்டுவதற்குத் திட்டங்கள் ஏதும் இல்லை. பகுதி 2 திட்டத்தின் கீழே எடுத்துச் செய்யப்படுகின்ற திட்டத்திலும் இது இல்லை. ஆகவே இந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் என்ற மதிப்பீடு இருக்கிறது. ஆகவே தற்போது இருக்கின்ற நிலைமையில் இப்போது அதை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று அரசு கருதுகிறது. இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற இளநீகரையிலிருந்து பிரிந்து செல்லுகின்ற பாலத்தை செல்ஃப் ஆஃப் ப்ராஜெக்ட்டிலே சேர்த்திருக்கிறோம். அதற்குரிய நிதியாதாரம் கிடைக்கப் பெற்றவுடன் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்றும் இந்த அரசு கருதுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது பாலத்தை செல்ஃப் ஆஃப் ப்ராஜெக்ட்லே சேர்க்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் அதனுடைய எஸ்டிபேட் என்ன? எப்போதிலிருந்து இந்தத் திட்டம் எடுத்துச் சொள்ளப்படும்? முதலிலே சொல்லக்கூடிய ஆடுசாபட்டி பாலம்—அந்த பேரூராட்சியிலே பணம் இல்லை. பணம் இல்லாத இடங்களில் எல்லாம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள்—பணமே இல்லாத பகுதியில் இருக்கின்ற பாலங்களுக்கெல்லாம் ஸ்பெஷல் சாங்ஷன் பண்ணி தனிக் கவனம் செலுத்தி அரசுப் பணத்திலிருந்து சாங்ஷன் செய்து கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் பேரூராட்சி மற்றும் ஊராட்சி சாலைகளை இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். பெரிய பாலங்களை எடுக்கின்ற நேரத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவாகின்ற நேரத்திலே, அனைத்து தொகுதிகளையும் கணக்கிடுகின்ற நேரத்திலே, அதற்கான நிதியாதாரங்களை அரசு கொடுப்பது என்பது இயலாத நிலை ஆகும். ஆகவே தான் மிகப் பெரிய மதிப்பீடு இருக்கின்ற பாலங்களை தன்னிறைவுத் திட்டத்தின் கீழே எடுத்துச் செய்வதற்கு சிறிய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்ற காரணத்தினாலே தான் மேலே சொல்லப்பட்ட அந்த ஆடுசாபட்டியை இணைக்கின்ற பாலத்திற்கு இப்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னேன். அதற்கு அடுத்ததாக இளநீகரையிலிருந்து செல்லுகின்ற அந்த பாலத்தினுடைய விவரம் என்ன என்று கேட்டார்கள். அதனுடைய நீளம் ஏறத்தாழ 12 மீட்டர் மதிப்பீடு 8 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்து, அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 506, திரு எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

506—

சாலை பழுதுபார்த்தல்

*4922 திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி அகரம் கிராமத்திலிருந்து நாராணம்மாள்புரம் வழியாக மாயமான்குறிச்சி செல்லும் சாலை பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.